**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4430/ஆ5/2023, நாள். 23.11.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – Energy Club செயல்படும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி மற்றும் ஓவியப் போட்டி நடைபெற்றது – வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு கேடையங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை
1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 26.10.2023
2. வேலூர் தமிழ்நாடு அறிவியல் இயக்கம், ஆற்றல் மன்ற ஒருங்கிணைப்பாளரின் கடித நாள். 20.11.2023

•••••

பார்வை 1–ல் காணும் கடிதப்படி, வேலூர் மாவட்டதில் ஆற்றல் மன்றம் செயல்படும் 30 அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 30.10.2023–க்குள் "மின் சேமிப்பு மின் பாதுகாப்பு" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி மற்றும் ஓவியப் போட்டி நடத்த தெரிவிக்கப்பட்டு, அதன்படி போட்டிகள் நடைப்பெற்று வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் பெறப்பட்டுள்ளது.

ஆற்றல் மன்றம் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு **06.12.2023 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு காட்பாடி, அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளியில்** ஒரு பள்ளிக்கு 6 பரிசுகள் வீதம் 30 பள்ளிகளுக்கு 180 கேடயங்களும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என பார்வை 2–ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கும் பொருட்டு பள்ளி ஆற்றல் மன்ற ஒருங்கிணைப்பாளருடன் மாணவர்களை இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்

2/3
28.11.23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்
1. ஆற்றல் மன்ற ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்,
14, பெல்லியப்பா கட்டிடம், ஆபீசர்ஸ் லைன், வேலூர் – 1.
2. தலைமையாசிரியர்,
அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி, வேலூர்.
(போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)